# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 34

# அந்திக்கிறிஸ்து பற்றின ஆராய்ச்சி

பாகம்-3



The Study of Antichrist Part - 3

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# அந்திக்கிறிஸ்து பற்றின ஆராய்ச்சி பாகம்-3



# The Study of Antichrist Part-3

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே, அந்திகிறிஸ்து அமைப்பை வேதாகமத்திலிருந்து கண்டு, அதை அநேக வசனங்களைக் கொண்டு நிரூபித்தபிறகு, தொடர்ந்து நாம் அந்திக்கிறிஸ்துவின் பிறப்பு, வளர்ச்சி, மற்றும் இறுதி அழிவைக் குறித்து அறிவது அவசியமாகிறது.

இப்பாடத்தில் அந்திக்கிறிஸ்துவின் இறுதி முடிவைக் குறித்துக் காண்போம். அந்திக்கிறிஸ்துவையும் அதன் அமைப்பையும் குறித்து வேதம் தெளிவாகவும் விளக்கமாகவும் சுட்டிக்காட்டியுள்ளதை கடந்த இரண்டு பாடங்களில் கண்டோம்.

வேதம் அந்திக்கிறிஸ்து அமைப்பின் வளர்ச்சியைக் குறித்து வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம் மற்றும் 17ம் அதிகாரங்களில் படம்பிடித்துக் காண்பித்துள்ளன. இவ்விரண்டு அதிகாரங்களும் முற்றிலும் வேறுபட்ட இண்டு ஸ்திரீகளைக் குறித்து பேசுகிறது. இந்த ஸ்திரீகளுக்கிடையில் காணப்படும் ஒரே ஒற்றுமை, இவர்கள் இருவரும் ஸ்திரீயாக இருப்பது மட்டுமே.

வெளிப்படுத்தல் 12 ம் அதிகாரத்தை வாசிக்கலாம் -

**வெளிப்படுத்தல் 12:1**



"அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்தில் காணப்பட்டது. ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள். அவள் பாதங்களின்கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன"

**யார் அந்த ஸ்திரீ?**

இவை அடையாள பாஷையில் கூறப்பட்டுள்ளன. அடையாள பாஷை என்பது தேவன் ஒரு காரியத்தை எளிய முறையில் மறைமுகமாக விளக்கும் மொழிநடையாகும். இது சுவிசேஷயுகத்தில் முதலாம் நூற்றாண்டில் ஆரம்பமான உண்மைச் சபையை குறித்துப் பேசுகிறது.

இந்த ஸ்திரீ சுவிசேஷத்தைப் பற்றிய ஞானம் என்னும் சூரியனை அணிந்திருந்தாள். அவள் பாதங்களின் கீழ் சந்திரன் என்னும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் மற்றும் நிழல்களை

ஆதாரமாகக்கொண்டு நின்றாள். அவள் சிரசின்மேல் 12 அப்போஸ்தலர்களை அடையாளப்படுத்தும் 12 நட்சத்திரங்கள் இருந்தன.

**வெளிப்படுத்தல் 12:2**

"அவள் கர்ப்பவதியாயிருந்து பிரசவவேதனை அடைந்து பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்"

இந்தக் காரியம் எதை விளக்குகிறது? சபை எவ்வாறு கர்ப்பந்தரிக்கும்? இவையெல்லாம்அற்புதமான அடையாளபாஷையில் சொல்லப்பட்டுள்ளது.

தாயின் கர்ப்பத்தினுள் ஒரு ஜீவன் யாரும் அறியாதபடி உருவாகிறதைப்போல, சபையாகிய சரீரத்தினுள் ஒரு ஜீவன் கண்ணிற்குப் புலப்படாமல் வளர்ந்தது என வேதம் கூறுகிறது. இவ்வாறு சபையாகிய சரீரத்திற்குள் வளர்ந்த அந்திக்கிறிஸ்து அமைப்பின் ஆரம்பகால அங்கங்களைக் குறித்து யோவான் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

**1யோவான்2:18,19**

"..அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள்.."

சபையானது தன் சரீரத்திற்குள்ளாக ஒரு புதிய வளர்ச்சி கண்டது.

அந்த ஸ்திரீயாகிய சபை, கர்ப்பவதியாய் இருந்து, பிரசவவேதனை அடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள். உண்மை சபைக்குள் இவ்வமைப்பின் வளர்ச்சி உண்மை சபை அங்கத்தினர்களை கலக்கமுறச் செய்தது. துக்கப்படும் சூழலை உண்டாக்கியது. இது ஒரு உவமையில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம் -

**மத்தேயு 13:27**

"வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து, ஆண்டவனே நீர் உமது நிலத்தில் நல்லவிதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள்"




இது முதலாம் நூற்றாண்டிலும் இரண்டாம் நூற்றாண்டிலும் சபை இருந்த நிலையைக் காட்டுகிறது.

**வெளிப்படுத்தல் 12:3**

"அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்தில் காணப்பட்டது. ஏழு தலைகளையும், பத்துக்கொம்புகளையும் தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது"

இவ்வடையாளம் அன்று ஆட்சிசெய்த ரோம ராஜ்யத்தை அடையாளமாகக் கூறுகிறது.

சிவப்பான பெரிய வலுசர்ப்பம் - புறமத வழிபாட்டிலிருந்த ரோமாபுரியை அடையாளப்படுத்துகிறது (தானியேல் 7:7)

ஏழு தலைகள் ஏழு அடுத்தடுத்து வந்த ரோம சாம்ராஜ்யத்தை ஆண்ட வெவ்வேறு அரசாட்சி முறைகளைக் குறிக்கிறது




1. கன்சுல்லார்(Consular Rome) - கிமு30
(அயல்நாட்டை சேர்ந்த ஆட்சிமுறை)

2. இம்பீரியல் (Imperial Rome)
(பேரரசைச் சார்ந்த ஆட்சிமுறை) - கிமு 27

3. கோதிக்(Gothic Rome) - கிபி 476

4. போப்புவின் ரோம்(Papal Rome) - கிபி 538
(போப்புவைச் சார்ந்த ஆட்சிமுறை)

10 கொம்புகள் - ரோம சாம்ராஜ்யத்தின் பத்துப் பிரிவுகள்

வானத்தில் என்பது ஒரு அடையாளம் - மதத்தின் மீதான அதிகாரத்திலிருந்த ரோம சாம்ராஜ்யத்தைக் குறிக்கும்.

**பெரிய வலுசர்ப்பம்** - (சமுதாயத்தின்மேல் அதிகாரம் -Civil Power) - இந்த ரோம சாம்ராஜ்யம் முந்தைய இராஜ்யங்களில் காணப்பட்டதுபோல, அரசியல் அதிகாரத்தையும், மத அதிகாரத்தையும் ஒன்றாக பெற்றிருந்தது. இந்த இராஜ்யங்களின் சக்கரவர்த்திகள் தங்களை கடவுளின் பிரதிநிதிகளாக அறிவித்து, அதன்மூலம் ஜனங்களின்மீது மதரீதியான அதிகாரத்தைச் செலுத்தி வந்தனர். ரோமசாம்ராஜ்யம் கிபி 300 வரையில் முதல் மூன்று நூற்றாண்டுகளில் மதத்தின் மீதான அதிகாரத்தில் இருந்ததைக் குறிக்கிறது. மேலும் தொடர்ந்து வாசிப்போம் -

வெளிப்படுத்தல் 12:4

"அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று. பிரசவ வேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளைபெற்றவுடனே அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது"

ஆதி சபையில் மூன்றாம் நான்காம் நூற்றாண்டில் கிபி 325ம் வருடம் நிறைவேறினவைகளைக் குறித்த தீர்க்கதரிசனமாகும்.

அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது. இது ஸ்திரீயானவள் அந்த வலுசர்ப்பத்திடமிருந்து பெற்ற உபத்திரங்களைக் குறிக்கிறது.

**'வால்**" - ரோம சாம்ராஜ்யத்தில் கடைசியாக ஆட்சிசெய்த சக்கரவர்த்தியான கான்ஸ்டான்டைனைக் குறிக்கிறது.

**'வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கை இழுத்து"** - கான்ஸ்டான்டைன் ஏற்பாடு செய்த ஒரு விசேஷமான மாநாட்டில், அப்பொழுது இருந்த கிறிஸ்தவ கண்காணிகளில் சிலர் கலந்துகொண்டனர். அம்மாநாட்டில், 'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"(யோவான் 10:30) என்ற வசனத்தில் இயேசுவின் நிலை என்ன? என்று ஆலோசிக்கும்படி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

**'அவைகளை பூமியில் விழத் தள்ளிற்று"** -அந்த கண்காணிகளுக்கு கான்ஸ்டான்டைன் கொடுத்த வெகுமதிகள், மரியாதை - அவர்கள் ஆவிக்குரியவைகளைத் தேடாமல் பூமிக்குரியவைகளைத் தேடும்படி வழிநடத்தியது.



**'பிள்ளைகளைப் பட்சித்துப் போடும்படிக்கு"** - இது நான்காம் நூற்றாண்டில் நடந்த காரியம். 'பிள்ளைகளைப் பட்சித்துப் போடுதல்" என்பது Devour என ஆங்கில NIV - யில், அதாவது வலுசர்ப்பமாகிய ரோம ராஜ்யம் பிள்ளையாகிய அந்திக்கிறிஸ்து அமைப்பை ஏற்றுக்கொண்டதைக் குறிக்கிறது. வெறும் ரோம அமைப்பாக இருந்து கிறிஸ்தவ ரோம அமைப்பாக உருப்பெற்றது. வெளிப்படுத்தல் 12:5ல் இந்த ரோம அமைப்பு சிறிது சிறிதாக அந்தி கிறிஸ்துவின் அமைப்பாக நிலைநிறுத்தப்படுவதைக் குறிக்கிறது - 2தெசலோனிக்கேயர் 2: 3

**இருப்புக்கோலால் ஆட்சி செய்வது** - இருண்ட யுகத்தில் காணப்பட்ட போப்பு மார்க்கத்தின் அராஜக ஆட்சியைக் குறிக்கிறது.

**தேவனுடைய சிங்காசனத்தினிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது** - இந்த போப்புமார்க்கமானது தன்னைத்தான் உயர்த்திக்கொள்ளுதலைக் குறிக்கிறது. அந்திகிறிஸ்து அமைப்பு சிறிய அளவில் வெளிப்படத் துவங்கியது, இதன் எதிர்காலத்தை தீர்க்கதரிசனமாக உரைக்கிறது.

**2தெசலோனிக்கேயர் 2:3,4**

"தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்"

**வெளிப்படுத்தல் 12: 6**

"ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள், அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது"

இதில் ஒரு ஸ்திரீயைக் காண்கிறோம். அந்திக்கிறிஸ்து அமைப்பு வளர்ந்துவரும் நிலையில், அதன் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் உண்மையான சபை இருந்ததைக் கூறுகிறது.

**'இந்த ஸ்திரீ வனாந்திரத்திற்கு ஓடிப்போனாள்"** - பொய்யான அமைப்பினரிடமும், அதன் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளிலிருந்து பிரிந்து வனாந்திரத்திற்கு ஓடிப்போவதைக் குறிக்கிறது.

இந்த அந்திக்கிறிஸ்து அமைப்பு அதிகாரம் செலுத்தும்படி தேவனால் இவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட காலம் 1260 நாட்கள் ஆகும். அதாவது 1260 வருடங்கள்(எசேக் 4:6, எண்14:34).

இந்தக் காலம் கிபி 539 முதல் கிபி 1799 முடிய இருக்கும் 1260 வருட காலஅளவாகும்.

மேலும் நாம் வாசிப்போம் -

**வெளிப்படுத்தல் 12:7**

"வானத்திலே யுத்தம் உண்டாயிற்று, மிகாயேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள். வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயம் கொள்ளவில்லை"

இந்த யுத்தம் பெரிய போராட்டத்தை அடையாளப்படுத்துகிறது.

இங்கு **வானம்** என்பது - மதத்தின் மீதான ஆளுகையைக் குறிக்கும்

**யுத்தம் அல்லது போராட்டம் யார் யாருக்கு?**

மிகாயேலும் அவனுடைய தூதர்களும் - இங்கு மிகாயேல் என்பது கள்ள மிகாயேல் அல்லது போப்பு மார்க்கத்தைக் குறிக்கிறது. மிகாயேல் என்றால் தேவனைப் போன்றவர் என்று அர்த்தம்

இந்த போப்பு மார்க்கம் தங்களை தேவனுடைய பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டனர்.

**வலுசர்ப்பம் மற்றும் தூதர்கள்** - ரோம சாம்ராஜ்யமானது அரசியல் மற்றும் மத அடிப்படையில் ஆட்சி செய்ததைக் குறிக்கும்.

**எதற்காக இந்த யுத்தம்?**

இந்த மதத் தலைமைத்துவத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஏற்படும் போராட்டம். இது நீண்ட காலம் நடைபெற்றது.

**வெளிப்படுத்தல் 12:8,9**

"வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று.
உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும்
சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது.
அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது.
அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்"

இவ்வசனம் நீண்ட போராட்டத்திற்குப் பின்பு அதாவது 325லிருந்து கிபி 539 வரையுள்ள காலப்பகுதிக்குப் பின்பு நிறைவேறியதைக் குறிக்கிறது. ரோம பட்டணத்து கண்காணியின் தலைமையின்கீழ் ரோம பேரரசிடமிருந்து மதத்தின் மீதான அதிகாரத்தைப் பெற்றனர். பின்னர் கிபி 799ல் உறுதிப்படுத்தி நிலைப்படுத்தி, 'பரிசுத்த ரோம ராஜ்ஜியம் என்று அழைத்தனர்.

**'மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட"** - ரோம சாம்ராஜ்யத்தை வலுசர்ப்பம் என்று கூப்பிடும் நிலை மாறி, பிசாசு என்றும் சாத்தான் என்றும் மாறியிருக்கிறது. காரணம், சாத்தான் அநேக ரூபங்களில் தோன்றி வஞ்சிப்பதுபோல ரோம சாம்ராஜ்யமும் தன்னுடைய ரூபத்தை மாற்றும் திறமையுடையதாக இருந்ததைக் குறிக்கும்.

**'அது பூமியிலே விழத் தள்ளப்பட்டது"** - மத அதிகாரத்திலிருந்து அரசியல் மீதான அதிகாரத்துக்கு பூமியிலே ரோம சாம்ராஜ்யம் தள்ளப்பட்டது. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. மதம் சார்ந்தவைகளின் மீது தலைமை வகிப்பவர் என்ற பட்டம்

சாம்ராஜ்யத்தின் கைகளிலிருந்து ரோம பட்டணத்து கண்காணியின் கைகளுக்குள் கிபி 539ம் வருடம் நடந்தேறியது. மேலும் தொடர்ந்து வாசிப்போம்

**வெளிப்படுத்தல் 12:10,12**

"அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி, இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். ஆகையால் பரலோகங்களே அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே, களிகூறுங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே, ஐயோ பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்கால மாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்"

**தேவனுடைய ராஜ்ஜியமும் அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும்** - போப் அமைப்பின் ஆட்சிக்குட்பட்ட காலங்களாகிய 799 - 1799 வரையில் தேவனுடைய ராஜ்ஜியம் என்றும் கிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சி என்றும் அறிவித்தனர்.

**ஆட்டுக்குட்டியின் இரத்தம்** - போப்பு மார்க்கத்தின் அதிகாரங்கள் தெய்வீக அதிகாரத்தின் அடிப்படையில் செயல்படுகிறது என்று கூறிக்கொண்டனர்.

ஆகையால் **பரலோகங்களே அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே** - போப்பு மார்க்கம் வல்லமையிலும், மகிமையிலும் வரும் காலத்தைக் குறிக்கிறது. தெய்வீக அதிகாரத்தை உரிமை கொண்டாடிய போதகர்கள், பிஷப் மற்றும் தலைமை போதகர்களை அடையாளப்படுத்துகிறது.

**பூமியிலும் சமுத்திரத்திலும் வாசம்செய்கிறவர்களே** - ஐயோ, போப்புவின் ஆட்சி, சமுதாயத்திற்கும் மனுக்குலத்திற்கும் சிலுவையின் பெயரில் இரத்தம் சிந்துதலையும், பெரிய அழிவையும் ஏற்படுத்துவதாயும் இருந்தது.

**வெளிப்படுத்தல் 12:13**

"வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண் பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது"

இவ்வசனத்தில் , வலுசர்ப்பம்(ரோம ராஜ்ஜியம்)அதன் சமூக அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஸ்திரீயை(உண்மை சபையை) கடுமையாக துன்புறுத்துவதை(Inquisition) காண்கிறோம்.

பரிசுத்த விசாரணை மூலம் போப்புமார்க்கமானது ஐரோப்பாவின் அரசியல் அதிகாரிகளை கருவியாகப் பயன்படுத்தி, உண்மை சபையை உபத்திரவத்துக்குள்ளாக்கியது.

**வெளிப்படுத்தல் 12:14**

"ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும்,

அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்திரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது“



இப்பகுதியில் அந்த ஸ்திரீ அல்லது உண்மை சபை தெய்வீக பாதுகாப்பில் 1காலம், 2 காலங்கள் மற்றும் 1/2 காலம்= $3^{1/2}$ காலங்கள் இருப்பதைக் காணலாம்.

அதாவது 1260 வருடங்கள் - கிபி 539 முதல் கிபி 1799 முடிய

**‘போஷிக்கப்படுதல்”** - என்பது புதிய சிருஷ்டிக்கான ஆவிக்குரிய உணவை அளித்து போஷிப்பதைக் குறிக்கிறது

**‘கழுகுகளின் இரண்டு சிறகுகள்”** - 1. பழைய ஏற்பாடு 2. புதிய ஏற்பாடு ஆகும்.

வனாந்திரத்திலுள்ள தன் இடத்திற்கு உண்மை சபையானது அந்திகிறிஸ்து அமைப்பிலிருந்து தனிமைப்படுத்துதல் அல்லது பிரிக்கப்படுதலைக் குறிக்கிறது.

**வெளிப்படுத்தல் 12:15,16**

“அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங் கொண்டுபோகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது. பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது“

இவ்வசனங்கள்18ம் நூற்றாண்டில் நடந்த பிரெஞ்சு புரட்சியைக் குறித்து அடையாள பாஷையில் கூறப்பட்டுள்ளது.

பாம்பு - சாத்தானைக் குறிக்கும்(ஆதியாகமம் 3:13)

அந்திக்கிறிஸ்து அமைப்புக்கு சாத்தானே தலைவன்

நதிபோன்ற வெள்ளம் என்பது தேவனுடைய சத்தியத்திற்கு அடையாளமாயிருக்கிறது - வெளிப்படுத்தல் 22:17

**இங்கு என்ன நடந்தது?**

சாத்தான் தன் தந்திரங்களை பயன்படுத்தி சில சத்தியங்களை (உண்மைகளை) நதிபோன்ற வெள்ளம்போல் ஊற்றினான். இது, ஆசாரியத்துவம், தலைமைத்துவம் , தனிப்பட்ட உரிமை மற்றும் மக்களின் சுதந்திரத்தை உள்ளடக்கியதாய் காணப்பட்டது. இது ஒரு பெரிய குழப்பத்தை உருவாக்கும் என்றும், உண்மை சபைக்கு துன்பத்தைத் தரும் என்றும் எண்ணினான்.

இந்த சத்தியமானது அந்நாட்களில் பிரபலமான பிரென்ச் பேச்சாளர்களாக இருந்த வால்டெர் (Voltaire) மற்றும் ஜீன் ஜாக்குஸ் ரூஸ்(Jean Jacques Rousseau)மூலம் வெளிப்பட்டது. இவர்கள் வேதத்தில் விசுவாசமற்றவர்களாய் இருந்து, சாத்தானின் கருவிகளாக இருந்தனர். ஆனால் இச்சத்தியங்கள் வெள்ளம்போல் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என வாசிக்கிறோம்.

இதுவே பிரஞ்சு புரட்சிக்கு வித்திட்டது.போப்பு அமைப்பின்அதிகாரத்திற்கு முடிவும் கிபி 1799ல் வந்தது.

**வெளிப்படுத்தல் 12:17**

"அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும்,இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப்போயிற்று"

கடைசியாக இந்த தீர்க்கதரிசனத்தில் சாத்தான் மற்றும் தன் பிரதிநிதிகளாகிய போப்புமார்க்கம் தன் அரசியல் சக்திகளின் அதிகாரத்தோடு உண்மை சபையை ஒடுக்க சுவிசேஷ யுகத்தின் முடிவில் நடைபெறவிருக்கும் காரியத்தை விளக்குகிறது.

அந்திக்கிறிஸ்து பிறப்பு மற்றும் அதன் வளர்ச்சியைக் குறித்து விளக்கமாகக் கண்டோம்.

இப்போது போப்பு மார்க்கத்தைக் குறித்த மற்றொரு தீர்க்கதரிசனத்தைக் காண்போம்.

**வெளிப்படுத்தல் 13:1-3**

"பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக்கண்டேன். அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன. அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன. நான் கண்ட மிருகம் சிறுத்தையைப் போலிருந்தது. அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன. வலுசர்ப்பமானது தன்பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன். ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி.."




இது போப்பு மார்க்கத்திற்கு ஒரு "மிருகமாக" சித்தரிக்கும் மற்றொரு தீர்க்கதரிசனமாகும்.
ஏழு தலைகள், பத்துக்கொம்புகள் -ரோம சாம்ராஜ்யத்தைக் குறிக்கும் அடையாளம். இந்த சாம்ராஜ்யத்திலிருந்தே போப்பு மார்க்கம் தோன்றியது.

**'பத்து முடிகள்"** - ரோமப் பேரரசின் 10பிரிவுகள் படிப்படியாக வளர்ந்து கிறிஸ்துவின் இராஜ்யம் என்று அழைக்கப்பட்டதை அடையாளமாகக் குறிக்கிறது. இது தேவ தூஷணமாகும். ஏனெனில் இவர்கள் போலியாக கிறிஸ்துவின் நாமத்தை பயன்படுத்தினர். போப்பு மார்க்கமும் ஜனங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்க பல்வேறுமுறைகளைக் கையாண்டனர்.

**'சிறுத்தையைப் போலிருந்தது"** - போப்பு மார்க்கத்தின் கொள்கைகளும் செயல்பாடும் நாட்டின் சூழ்நிலை மற்றும் இடத்துக்கு தகுந்தபடி மாறும் தன்மையுடையதாய் இருக்கிறது.(உ.ம்)- பிலிப்பைன்ஸில் பில்லி சூனியங்கள், இந்தியாவில் இந்த மத சம்பிரதாயங்கள் -ரோமன்

கத்தோலிக்கரால் அங்கீகரிக்கப்படுகிறது.

“சிங்கத்தின் வாயைப்போல” - இது பாபிலோனிய ராஜ்யத்துக்கு அடையாளமாயுள்ளது(தானியேல் 7:4) இந்த ராஜ்ஜியம் புகழ்பெற்றதும், மகிமைக்குரியதுமாய் காணப்பட்டது. இருந்தபோதிலும் இந்த போப்பு அமைப்பு ரோமப் பேரரசிடமிருந்து - அதாவது கான்ஸ்டான்டைன் மற்றும் ஜஸ்டீனியன் மூலம் அதிகாரத்தைப் பெற்றதைக் கூறுகின்றது.
3ம் வசனத்தில் ....”தலைகளில் ஒன்று சாவுக்கேதுவாய் காயப்பட்டிருக்க..” - இது சீர்திருத்த இயக்கத்தின்மூலம் போப்பு அமைப்புக்கு பெரும் சவுக்கடிவிழுந்ததைக் குறிக்கிறது.

இது பட்டயமாகிய தேவ வார்த்தையினால் உண்டான காயமாகும். இந்த பட்டயத்தைக் குறித்து

**எபிரேயர் 4:1,2**

“தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப்பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது“

“ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது“ - போப்பு மார்க்கம் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட பலத்த அடிக்குப் பிறகு மீண்டும் எழும்பினதைக் குறிக்கிறது.

சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவர்களும், அவர்களைப் பின்பற்றினவர்களும் போப்பு அமைப்பை எதிர்ப்பதற்கு பதில் அதிலேயே விழ நேர்ந்தது. சபை அரசியலில் இணைந்து செயல்படும் ஆவியில் விழுந்தது. (உ.ம்) - ஜெர்மனியில் உள்ள லுத்தரன் சபையானது ஜெர்மன் அரசனிடமிருந்தே அநேக சலுகைகளை பெற்றது. ஆனால் சத்தியம் இந்த போப்பு அமைப்பைப் பற்றி தீர்க்கமாக வெளிப்படுத்தியது.

இதுவரை போப்பு அமைப்பின் காரியங்களைக் குறித்த தீர்க்கதரிசனங்களைக் கண்டோம். இது ஒரு மிருகம் என்றும், சபை மற்றும் சமூகக் கூட்டமைப்பு என்றும் தெளிவாகக் கண்டோம்.

இந்த கூட்டமைப்பு குறித்து வெளிப்படுத்தல் 17ம் அதிகாரத்தில் தெளிவாகக் காண்போம். இதில் ஒரு ஸ்திரீயைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. யார் அந்த ஸ்திரீ?

**வெளிப்படுத்தல் 17:3-6**

“ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான். அப்பொழுது ஏழு தலைகளையும் பத்துக்கொம்புகளையும் உடையதும் தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்பு நிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக்கண்டேன். அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்து பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். மேலும் இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது. அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின்

இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன்.
அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்"

பரிசுத்தவான்களை துன்புறுத்தின இந்த ஸ்திரீ யார்?

"ஏழு தலைகளையும் பத்து கொம்புகளையும் உடையதும், தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்பு நிறமுள்ள மிருகத்தின்மேல்.."

**ஸ்திரீ** - மகாபாபிலோன் வேசிகளின் தாய் - இது கள்ளசபையைக் குறிக்கிறது. இவள் ஏழு மலைகள் உள்ள நகரத்தின் நடுவில் அமர்ந்திருப்பதை சுட்டிக் காட்டுகிறது. இது ரோம நகரத்தைக் குறிக்கிறது. இது ரோமன் கத்தோலிக்க சபைக்கு முன்னடையாளம்.

அந்த ஸ்திரீ அமர்ந்து இருப்பது போப்பு மார்க்கத்தின் பலத்த ஆதரவைப் பெற்றிருப்பதைக் காட்டுகின்றது.

**சிவப்பு நிறமுள்ள மிருகம்** - பாவமனுஷனைக் குறிக்கிறது (2தெசலோனிக்கேயர் 2:3,4)

சிவப்பு - பாவத்திற்கு அடையாளமாக கூறப்பட்டுள்ளது -

**ஏசாயா 1:18**

".உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்"

**சபை** - சமூகக் கூட்டமைப்பு, ரோமிலுள்ள போப்பு அமைப்பைக் குறிக்கிறது. இவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட காலம் 1260 வருடங்கள் ஆகும்(கிபி 539 முதல் கிபி 1799 வரை)

அந்த ஏழு தலைகளும் ரோம சாம்ராஜ்ஜியத்தைக் குறிக்கிறது. இந்த ஸ்திரீ கள்ள அப்போஸ்தலர்களைக் குறிக்கின்றாள்.

வெளிப்படுத்தல் 17:1ம் வசனத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும் ஸ்திரீயும் ரோமன்கத்தோலிக்கத் திருச்சபையையே குறிக்கும்.

இவர்களின் கூட்டமைப்பே ரோமசபை என்று அழைக்கின்றனர். இவர்கள் உண்மை சபையினரிடமிருந்து வேறுபட்டவர்கள் -கற்பில்லாத கன்னிகை -

**2கொரிந்தியர் 11:2** ம் வசனத்தில் கற்புள்ள கன்னிகை என்று உண்மையான சபை காண்பிக்கப்பட்டிருக்கிறது.

**இந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்புஆடைகள் தரித்தவளாய்** - இந்த அடையாளங்கள் போப்பு மற்றும் பேராயர்களை குறிக்கிறது. இவர்கள் மகிமையிலும் இராஜரீகத்திலும் ஆளுகை செய்ததைக் குறிக்கிறது.

**பொற்பாத்திரத்தில் அருவருப்பு** - இப்பாத்திரம் வேதத்தைக் குறிக்கிறது

**ஏசாயா 52:11**

"அசுத்தமானதைத் தொடாதிருங்கள்.கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே.."

வேதம் தவறாக புரிந்துகொள்ளப்பட்டதையும், அநேக கள்ளபோதனைகள் சேர்க்கப்பட்டதையும்



அருவருக்கும் அசுத்தத்தையும் குறிக்கிறது -உதாரணமாக வெளிப்படுத்தல் 12:10 ல் அங்கீரிக்கப்பட்ட தேவனாகவும், பூமியின் மீதான கிறிஸ்துவின் இராஜ்யமாகவும் தவறாக உரிமை கொண்டாடியது.

**இரகசியம்** - அக்கிரமத்தின் இரகசியம் என 2தெசலோனிக்கேயர்2:7ல் கூறப்பட்டுள்ளது.

**மகா பாபிலோன்** - இது ரோமன் கத்தோலிக்க சபை, கள்ளபோதனைகள் மற்றும் குழப்பத்தின் இருப்பிடம். பாபிலோன் என்னும் அடையாளம் , பரலோகத்திற்கான வாசலாக கருதப்பட்டு, இறுதியில் பாஷைகள் தாறுமாறாகி, குழப்பமுண்டான பாபேல் கோபுரத்தைக் குறிக்கிறது. அதுபோல ரோமன் கத்தோலிக்க சபை வேதத்தில் காணப்படாத உபதேசங்கள் மற்றும் போதனைகளைக் கொண்ட மாபெரும் குழப்பத்தின் அடையாளமாக இருக்கிறது.

**வேசிகளின் தாய்** - ரோமன் கத்தோலிக்க சபை தன்னை தாய்சபை என்று கூறிக்கொள்கிறது

**வேசித்தனம் அல்லது விபச்சாரம்** -ஆவிக்குரிய உண்மையற்ற நிலைமையைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் சபை என்று தங்களை சொல்லிக்கொண்டு, மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவுக்காக காத்திருப்பதை தவிர்த்து **(வெளி 19:7, மத்தேயு 25:1)**

உலக ராஜ்ஜியங்களோடும் சமூகத்தோடும் தொடர்பு வைத்திருப்பதைக் காட்டுகிறது **(யாக்4:4)**

வேதாகம பார்வையில் நாம் ஆராய்ந்து பார்க்கையில், இந்த வேசிகளின் தாய் ரோமன் கத்தோலிக்க சபையைக் குறிக்கிறது. யாரெல்லாம் இவர்களுடைய பிள்ளைகள்?

இந்த போப்பு அமைப்பு போலவே உலகத்தோடும், அதின் இராஜாக்களோடும் தொடர்பு வைத்திருக்கும் சபைகளைக் குறிக்கும்.

**வெளிப்படுத்தல் 13:11**



"பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன். அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளை உடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது"

இக்காரியம் இங்கிலாந்தில் உள்ள சபைகளையும் அயர்லாந்தில் உள்ள சபைகளையும் குறிக்கிறது. இவர்கள் போப்பு அமைப்பின் பிடியிலிருந்து தங்களை 1531ம் ஆண்டில் , 8ம் ஹென்றி காலத்தில் விடுவித்துக் கொண்டனர்(எபிஸ்கோப்பல் சபை - Episcopal church).

இப்பொழுது இந்த அடையாளங்களுக்கான பொருளை நாம் காண்போம்:

**"இரண்டு கொம்புகள்"** - இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தை குறிக்கிறது

"ஆட்டுக்குட்டியைப்போல்" - போப்பு மார்க்கத்தைப் போன்று கொடியதும், முரட்டுத்தனம் வாய்ந்த அமைப்பாக இல்லாமல் இருந்தது

"வலுசர்ப்பத்தைப்போன்று பேசினது" - இவ்வடையாளம் சமூக அதிகாரத்தை இவ்வமைப்பு தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது.

இவ்வமைப்பின் தலைவன் இங்கிலாந்தின்அரசன் 1517க்குப் பின்பு சீர்திருத்த காலம் வந்தது.போப்பு அமைப்பை எதிர்த்த புராட்டஸ்டன்ட் அமைப்பு சீர்திருத்தவாதிகளான மார்டின் லூத்தர், ஜான்வெஸ்லி, ஜான் நாக்ஸ், கால்லின் ரிட்லி போன்றோரால் உருவாக்கப்பட்டது.சில வேத ஆதாரங்களைக்கொண்டு ரோமன் கத்தோலிக்க சபையே அந்திக்கிறிஸ்து என கண்டுபிடிக்கப்பட்டு கண்டனத்துக்குள்ளாயின.

சில காலம் கழிந்தபின்னர் 2முதல் 3 நூற்றாண்டு கடந்தபின்பு இவ்வமைப்பை பின்பற்றி வந்தவர்கள் அவர்கள் வழிநடத்தி வந்தவர்களின் கொள்கைகளையும் , எதிர்த்த நோக்கத்தையும் மறந்து, தாய்சபையின் ஆவியை (உபதேசத்தை) திரும்பவும் எழுப்பி, உலகப் பிரகாரமான வல்லமையையும். அதிகாரத்தையும் தேடத் துவங்கினர். இப்படிப்பட்ட சபைகளைக் குறித்து வேதம் பின்வருமாறு கூறுகின்றது :

**ஏசாயா 4:1**

"அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து, நாங்கள்எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம், எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன் பேர் மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள்"

இது அடையாள பாஷையில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனமாகும். இந்த ஏழு ஸ்திரீகள் என்பது சுவிசேஷயுகத்தில் உருவாகும் ஒட்டு மொத்த கள்ளசபைகளுக்கு அடையாளமாக காண்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் ஒரே புருஷனைப் பிடித்துக்கொள்கின்றனர். யார் இந்த ஒருவர்? அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கின்றார். இச்சபைகளெல்லாம் கிறிஸ்தவ சபைகள்.

**தங்கள் அப்பத்தையே(உபதேசம்) புசித்தனர்** - அவர்களுடைய போதனைகள் கிறிஸ்துவினுடையதோ அல்லது வேதத்தின் அடிப்படையில் இல்லாமல் சுய கருத்துக்களாய் இருந்தன. எ.கா - ஆத்துமா, நரகம், திரித்துவம்.

**தங்கள் வஸ்திரங்களையே அணிந்திருந்தனர்** - கிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய நீதியைக் குறித்தும் அக்கரையற்றவர்களாய் **(ஏசாயா 61:10)** தங்கள் சொந்த நீதி நியாயங்களை தரித்தவர்களாய் காணப்பட்டனர் **(ஏசாயா 64:6)**

**இவர்களது நீதி** - பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அநாதை இல்லங்கள் போன்றவற்றை நிர்வகிக்கும் சமூகசேவைகளாக இருக்கிறது. இவைகள் அனைத்தும் நன்மையாக இருந்தாலும், ஒருவருடைய பாவத்தைக் கழுவாது.

இப்பொழுது கிறிஸ்துவின் உண்மை சபையைக் குறித்து காண்போம் :

**வெளிப்படுத்தல் 14:4**

"ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே. கற்புள்ளவர்கள்இவர்களே"

இவர்கள் உண்மை சபையைக் குறிக்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை1,44,000. இப்பொழுது இந்த அடையாளத்தின் முக்கியத்துவத்தை காண்போம்.

**ஸ்திரீகளால் தங்களை கறைப்படுத்தாதவர்கள்** - உண்மையான சத்தியத்தைத் தெரிந்து உணர்ந்துகொண்ட இவர்கள், அந்த ஸ்திரீயிடம் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளாதவர்கள். தவறான கள்ளபோதனைகளுக்கு உட்படாதவர்கள்.

**இவர்கள் கற்புள்ளவர்கள்** - கிறிஸ்துவின் ஆவியிலும் அவருடைய சத்தியத்திலும் உண்மையுள்ளவர்கள் இவ்வுண்மைச் சபையைக் குறித்து வேதம் மற்றொரு கோணத்தில் விளக்கியுள்ளது.

**வெளிப்படுத்தல் 20:4**

"அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன். அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள். நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும், தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும், தங்கள் நெற்றியிலும், தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன்."

இங்கு குறிப்பிடப்பட்ட முத்திரை என்பது அடையாளத்திற்காக பயன்படுத்தப்படுவதாகும். உண்மை சபை அங்கத்தினர், மிருகம் மற்றும் மிருகத்தின் சொரூபத்தின் முத்திரையை பெற மாட்டார்கள். மிருகம் என்பது போப்பு மார்க்கத்துக்கு அடையாளம் என்று அறிவோம். மிருகத்தின் சொரூபம் எதைக் குறிக்கும் என்றுஅறியுமுன், முத்திரை போடப்படும் இடத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் காணலாம் -

**"தங்கள் நெற்றிகளில்"** - தாமாக மனமுவந்து, ஆர்வத்துடன் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுதலைக் குறிக்கிறது.

**"தங்கள் கைகளில்"** - ஊழியத்தின் வேலைகளையும், தேவைகளையும், அதன் செலவுகளில் தங்களால் இயன்ற வகையில் சந்தித்தலைக் குறிக்கின்றது

இப்பொழுது 'மிருகத்தின் சொரூபம்" என்பது எதைக்குறிக்கும்? பின்வரும் வசனத்திலிருந்து அறியலாம் -

**வெளிப்படுத்தல் 13:15**

"மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்கு சத்துவங் கொடுக்கப்பட்டது"

**மிருகத்தின்(சொரூபம்) அடையாளம் என்ன ?**

போப்பு மார்க்கம் வல்லமையிலும் ஒற்றுமையிலும் உலகம் முழுவதும் ஒரே அமைப்பாக இருப்பதுபோல், தாங்களும் ஒரே அமைப்பாக உருவாகவேண்டும் என்பதற்காக புராட்டஸ்டன்ட் சபைகள் எடுத்த முயற்சியைக் குறிக்கும். இந்த முயற்சி வெகுகாலத்திற்கு முன்பே எடுக்கப்பட்டு, மூன்று முக்கிய நிலைகளை கடந்துள்ளது.

1. இவாஞ்சலிக்கல் கூட்டு ஒப்பந்தம் (1846) - The Evangelical Alliance of 1946
2. உலக கூட்டணியிலுள்ள சபைகள - The World council of churches
3. இன்றுள்ள உலக கிறிஸ்தவ அமைப்புகள - The Ecumenical movement of Today

**இவ்வமைப்புகளுக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்?**

இரண்டு கொம்புகளுடைய மிருகமாகிய இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து அரசுகளிடமிருந்து இது சத்துவம் பெற்றது. இந்த மிருகம் இங்கிலாந்தைச் சார்ந்த எப்பிஸ்கோப்பல் சபையாகும்.

**அதற்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் என்ன?**

கிறிஸ்துவின் உண்மை ஆதிகால சபையின் அப்போஸ்தலர்களான பேதுரு முதலானோர் வழிவந்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டனர். அவை ரோமன் கத்தோலிக்க திருச்சபை மற்றும் இங்கிலாந்தின் திருச்சபையாகும்.இவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் உண்மையான சபை என்று உரிமை கொண்டாடினர். இது அப்போஸ்தல உரிமை(Apostolic succession) என்று அழைக்கப்படுகிறது.

இறுதியாக, இவர்களுடைய பிள்ளைகள் தாயுடன் ஒப்பந்தம் வைத்துள்ளனர். இதற்கு ஆதாரமாக **வெளிப்படுத்தல் 17:11-13** வசனங்கள் உள்ளன.

"இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும் நாசமடையப் போகிறவனுமாயிருக்கிறான். நீ கண்ட பத்துக்கொம்புகளும் பத்து இராஜாக்களாம். இவர்கள் இன்னும் இராஜ்யம் பெறவில்லை. இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் இராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் ஒரே யோசனை உள்ளவர்கள். இவர்கள் தங்கள் வல்லமையையும், அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்."

இந்த தீர்க்கதரிசனத்தில் ஒரு பகுதி ஏற்கனவே நிறைவேறினது, மற்றொரு பகுதி நிறைவேறுவதற்காகக் காத்திருக்கிறோம்.

**"இருந்ததும், இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப் போகிறவனுமாயிருக்கிறான் "** - இது அந்திகிறிஸ்து அமைப்பாகிய போப்பு மார்க்கத்தைக் குறிக்கிறது. பழைய ரோம சாம்ராஜ்யத்தின் ஏழு தலைகளில் ஒன்றிலிருந்து உருவாவதைக் குறிக்கிறது.

**'எட்டாவதாக இருப்பார்"** என்பது , அதன் புதுப்பிக்கப்பட்ட அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட காலம்



பெறுவதைக் குறிக்கிறது.

இந்த வல்லமை எப்படி பெறப்படுகிறது? இங்கு 10 கொம்புகளும் இன்றைய ஐரோப்பிய தேசங்களாக உள்ளது. இவர்கள் ஐரோப்பிய யூனியன் என்று ஒரே எல்லைக்குள் வந்துள்ளனர். இவர்களுடைய நாணயமும் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டு, "**யூரோ நாணயம்**" என்றழைக்கப்படுகிறது. இந்த ஐரோப்பிய யூனியன் நாடுகள் தங்கள் முழு ஆதரவையும் போப்பு மார்க்கத்திற்கு அளிக்கும்பொழுது இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறித்தீரும். இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே துவங்கியிருப்பதை வாட்டிக்கனின் அதிகாரப் பூர்வமான நாளிதழ் "லாசர் வாட்டோர்" - ரோமானோவில் 2003, ஜுலை 23ம்தேதி வெளியான செய்தி உறுதிப்படுத்துகிறது. இவ்விதமாக இறுதிப்போராட்டத்திற்கான சூழ்நிலை உருவாகும்.




**வெளிப்படுத்தல் 17:14 ∴ 19:19**

"இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டியானவர்கர்த்தாதி கர்த்தரும்ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார். அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்,உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்"
'பின்பு, மிருகமும் பூமியின் இராஜாக்களும் அவர்களுடையசேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்கு கூடிவரக்கண்டேன்"

**மிருகம்** - அந்திக்கிறிஸ்து **பூமியின் இராஜாக்கள்** - அரசியல் சக்திகளின் ஆதரவு
**அவர்களுடைய சேனைகள்** - போப்பு மார்க்கத்திற்கும், இந்த கூட்டணிக்குமான மனுக்குலத்தின் மத்தியில் உள்ள ஆதரவாளர்களுடன் உண்டான இறுதியுத்தம்

இந்த கூட்டணியைக் குறித்து பின்வரும் வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது -

**வெளிப்படுத்தல் 16:13,14**

"அப்பொழுது வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்தஆவிகள் புறப்பட்டுவரக்கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள். அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்கும்படிக்கு புறப்பட்டுவருகிறது"

இந்த கூட்டணியானது மூன்று அணிகளுக்கு மத்தியில் இருக்கும் என்பதை இந்த மூன்று அடையாளங்கள் விளக்குகிறது.

- 1.மிருகம் - போப்பு மார்க்கம் மற்றும் ரோமன் கத்தோலிக்க சபை
- 2. வலுசர்ப்பம் - பூமியின்அரசியல் சக்திகள் - அதாவது ஐக்கியநாடுகளின் சபை, ஐரோப்பிய நாடுகளில் ஆளுகை செய்யும் அமைப்புகள்
- 3.கள்ளதீர்க்கதரிசி - புராட்டஸ்டன்ட் சபையின் ஒருங்கிணைப்பிற்கு தேவன் பயன்படுத்தும் அடையாளம். இவர்கள் தங்களை, தேவனுடைய வார்த்தைகளை உபதேசிக்கும் தீர்க்கதரிசிகளாக உரிமை கொண்டாடுகின்றனர். ஆனால் இவர்கள் உண்மையில் கள்ளபோதனையை போதிக்கும் கள்ள தீர்க்கதரிசிகள்.

இந்த மூவரின் கூட்டணி, உலகத்தின்மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும். மேலும் ஆட்டுக்குட்டியானவரோடு எதிர்த்து போராடவும் முயற்சிக்கும்( **வெளிப்படுத்தல் 19:19** ) இதன் உச்சகட்டத்தைக் குறித்து வாசிக்கையில்,

**2தெசலோனிக்கேயர் 2: 8**

"நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்,
அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து,
தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்"

இங்கு அக்கிரமக்காரனாகிய அந்திகிறிஸ்து அமைப்பின் இரகசியம், கர்த்தரின் கடைசிக்கால சரீர அங்கங்கள் மூலமாக வெளிப்படுத்தப்படும். இந்த சாட்சியங்களால் அந்திகிறிஸ்து அமைப்பின் உண்மையான சுயரூபம் வெளிப்படும். இது அந்திக்கிறிஸ்து அமைப்பின் முடிவுக்கும், இறுதி அழிவுக்கும் வழிநடத்தும்.

**வெளிப்படுத்தல் 17:16**

"நீ மிருகத்தின்மேல் கண்ட பத்துக்கொம்புகளானவர்கள் அந்த வேசியைப் பகைத்து,
அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி,அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து,
அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள்"

போப்பு மார்க்கம் அரசியல் சக்திகளிடமிருந்து பெற்ற ஆதரவு திரும்பப் பெறப்படுவதைக் குறித்த தீர்க்கதரிசனமாகும். மற்றொரு வசனத்தில் இது தெளிவாக கூறப்பட்டுள்ளது -

**வெளிப்படுத்தல் 16:19**

"அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது,
புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்கு
தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக்
கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது"

இங்கு மகா நகரம் என்பது மிருகம் வலுசர்ப்பம், கள்ளதீர்க்கதரிசிக்கு மத்தியில் உண்டான கூட்டணியை குறிக்கிறது

இந்த கூட்டணி அப்பொழுது முழுமையாக உடையும்

**அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி** - அந்திக்கிறிஸ்து அமைப்பின் உண்மை சுயரூபத்தை அடையாளங் கண்டபிறகு, இந்த அரசியல் சக்திகள் தங்களை முழுவதுமாக அதனிடமிருந்து பிரித்துக்கொள்கிறார்கள்

**அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து** - அந்த அமைப்பு அழிக்கப்பட்டு, விழுங்கப்படுவதைக் குறிக்கும்

**அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள்** - இந்த அமைப்பை முற்றிலுமாக அழிப்பதற்கு தேவன் அதன்மேல் வருவிக்கும் நியாயத்தீர்ப்புகளைக் குறிக்கும். இந்த நியாயத்தீாப்புகளை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 14:10**

“அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்”

அந்த அமைப்பில் இருக்கும் தனிப்பட்ட அங்கத்தினர்கள் அனுபவிக்கும் மனவேதனையை இது கூறுகிறது. மேலும் நாம் வாசிக்கையில்

**வெளிப்படுத்தல் 18:21**

“அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய எந்திரக் கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து, இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்”

எல்லா அமைப்புகளுக்கும் தலையாக இருந்த அந்திக்கிறிஸ்து அமைப்பின் இறுதியான அழிவை கூறுகிறது. இதன் இறுதியான அழிவை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 19:20**

“அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது, மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்“

இங்கு **மிருகம்** - மதம், அரசியல் இணைந்த ரோமன் கத்தோலிக்க போப்பு மார்க்கம்
- புராட்டஸ்டன்ட் பிரிவுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு(எரேமியா 14:14, 23:16-18)

**உயிரோடே தள்ளப்பட்டார்கள்** - முழுமையான அதிகாரத்தில் செயல்படும் அமைப்பாக இருந்த அதன் நிலைமையை கூறுகிறது

**கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே** - முழுமையும் நித்தியமுமான அழிவு

இவ்வாறு அந்திக்கிறிஸ்து அமைப்புக்களாகிய பாபிலோனின் தாய் மற்றும் குமாரத்திகளின் முழுமையான அழிவானது, தேசங்களின்மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, இரண்டாம் உலகத்தின் முடிவுக்கும், மகாஉபத்திரவக் காலத்தின் உச்சகட்டத்துக்கும் வழிநடத்தும். இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் -

**எரேமியா 50:46**

" பாபிலோன் பிடிபட்டதின் சத்தத்தினால் பூமி அதிரும், அதின் கூப்பிடுதல் ஜாதிகளுக்குள்ளே கேட்கப்படும்"

இவ்விதமாக இந்த அந்திக்கிறிஸ்து அமைப்பானது - கிறிஸ்தவ அமைப்பாக தன்னை காட்டிக்கொள்வதை நாம் அறிந்தோம். இரண்டாம் வருகைக்கு முன்பே "கிறிஸ்துவின் இராஜ்யத்தை இப்பூமியில் ஸ்தாபித்ததாக உரிமைகொண்டாடும் இந்த அமைப்பு - கள்ள போதனைகளால் நிறைந்திருந்து, தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் நாசத்தை ஏற்படுத்துகிறது **(வெளிப்படுத்தல் 17:6)**. இந்த அமைப்பு சாத்தானுடைய அமைப்பாக இருந்து சபைகளை வஞ்சித்து, அவர்களை முழுமையான அந்தகாரத்திற்குள் வைத்திருக்கும் அமைப்பாகும்.

உண்மையாகவே இது ஒரு "அக்கிரமத்தின் இரகசியம்"

இன்று புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களை - அந்திக்கிறிஸ்து என்கின்றனர்

அதுபோல் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களை அந்திக்கிறிஸ்து என்கின்றனர்.

ஆனால் இவர்கள் இருவருமே வேதத்தில் எழுதப்பட்டிருக்கிற அந்த மாபெரும் அந்திக்கிறிஸ்து அமைப்பில் பங்கு வகிக்கிறார்கள். நாம் இன்று பெற்றுக்கொண்ட இந்த மாபெரும் சத்தியத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

தேவகிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக ஆமென்.

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/


Member States of the European Union
member states
non-members
Norway
Finland
Sweden
Baltic Sea
Estonia
Russia
North Sea
Latvia
Denmark
Lithuania
uk
Ireland
United Kingdom
Netherlands
Germany
Poland
Belarus
Belgium
Luxembourg
Czech Republic
Slovakia
Ukraine
Atlantic Ocean
France
Switzerland
Austria
Hungary
Moldova
Slovenia
Croatia
Romania
Italy
Serbia
Bosnia and Herz.
Monte
Bulgaria
Macedonia
fr
tr
Albania
Spain
it
Greece
Turkey
Portugal
it
Mediterranean Sea
Malta
gr
Cyprus